ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/58 - 2018 අප්‍රේල් මස 01 වැනි ඉරිදා - 2018.04.01

*2064/58 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

*115 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 115 ஆம் பிரிவின்கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் திசாநாயக முதியன்செலாகே லலித் ஜவன் திசாநாயக ஆகிய நான், 2018.04.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இதன்கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில் வரி செலுத்துநரொருவரின் சார்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தொடர்பாடலைப் பேணுவதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவரை நியமனம் செய்து கொள்வதற்கு சந்தர்ப்பமளிக்கும் நோக்கில் இக்கட்டளையை வெளியிடுகின்றேன்.*

டி. எம். எல். ஜ. திஸாநாயக,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

*உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,*
*கொழும்பு 02,*
*2018, ஏப்பிறல் 01.*

**அட்டவணை**

*(1) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 102 ஆவது பிரிவின் பிரகாரம் வரிசெலுத்துநரைப் பதிவுசெய்து கொள்ளுதல் மற்றும் வரி வகைகளைப் பதிவுசெய்து கொள்ளுதல் தொடர்பில் திணைக்களத்துடன் சகல கடிதப் பரிமாற்றல்களை மேற்கொள்வதற்காக.*

*(2) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 103(5) ஆவது பிரிவின் பிரகாரம் வரிசெலுத்துநரினால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்களை அறிவிப்பதற்காக.*

1A - PG 4001 — 432 (2018/04)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(3) வரிசெலுத்துநர் சார்பாக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 107 ஆவது பிரிவின் பிரகாரம் இந்த வரிச் சட்டத்தின் குறிப்பிட்டதொரு சட்ட ஏற்பாடு தொடர்பில் கடந்த காலத்தில் மேற்கொண்ட அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தனிப்பட்ட ரீதியில் சட்ட வியாக்கியானமொன்றுக்கு விண்ணப்பிக்கும் நோக்கத்திற்காகவும் அது தொடர்பில் சகலவிதமாக கடிதப் பரிமாறல்களை மேற்கொள்வதற்காகவும்.

(4) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 118 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படவுள்ள ஏதேனும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பில் கோரிக்கை செய்யும் நோக்கத்திற்காகவும்.

(5) உதவி ஆணையாளரொருவரால் கோரப்பட்ட ஏதேனும் தகவல்களைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக அல்லது உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் தேவை நோக்காக அறிவித்தல் மூலம் நிச்சயப்படுத்தப்பட்ட நேரத்திலும் இடத்திலும் சமுகமளிப்பதற்காக.

(6) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் XI ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரி விபரத்திரட்டுக்கள், மேலதிக விபரத்திரட்டுக்கள் மற்றும் தகவல் விபரத்திரட்டுக்களைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக.

(7) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 136 ஆவது பிரிவின் பிரகாரம் சுயமதிப்பீட்டு விபரத்திரட்டில் திருத்தங்களைச் செய்வதற்கு கோரிக்கை விடுக்கும் நோக்கத்திற்காக.

(8) நிருவாக மீளாய்வுகளுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல், ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் மீளாய்வுகளின்போது வரிசெலுத்துநரைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் , தேவைக்கேற்ப எழுத்துமூல ஆவணங்களைச் சமர்ப்பித்தலும் வரிசெலுத்துநரின் சார்பாக அது தொடர்பில் ஆணையாளர் நாயகத்துடன் உடன்பாடொன்றை எட்டுவதற்காகவும்.

(9) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 130 ஆவது பிரிவின் பிரகாரம் விபரத்திரட்டுக்களைக் கோப்பிடுவதற்கான கால நீடிப்புக்கு விண்ணப்பம் செய்தல் மற்றும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 151 ஆவது பிரிவின் பிரகாரம் செலுத்துகைக்கான கால நீடிப்புக்கு விண்ணப்பம் செய்யும் நோக்கத்திற்காகவும்.

(10) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 150 ஆவது பிரிவின் பிரகாரம் மீளளிக்கத்தக்க தொகைகளுக்கு விண்ணப்பித்தல் மற்றும் அது தொடர்பில் திணைக்களத்துடன் சகல வகையான கடிதப் பரிமாற்றல்களை மேற்கொள்வதற்காகவும்.

(11) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 186 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும், இச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்படக்கூடிய ஏதேனும் வகையான விசாரணையொன்றில் வரிசெலுத்துநரைப் பிரதிநிதித்துவம் செய்யும் நோக்கத்திற்காக.

(12) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 93(3) ஆம் பிரிவின் பிரகாரம் வரி செலுத்துநர் சார்பாக மூலதன இலாப வரி விபரத்திரட்டைச் சமர்ப்பிப்பதற்கு.

(13) ஏதேனும் வேறு கருமங்களில் வரி செலுத்துநரைப் பிரதிநிதித்துவம் செய்யும் நோக்கத்திற்காக வரி செலுத்துநரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்படும்போது.

5-51

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.